### பாக அமைப்பாளர்கள்

பாகம் – 36 : கி.வெங்கடேசன், 215/9, மண்டபத்தெரு, சிறுணை பெருகல், காஞ்சிபுரம்.

பாகம் – 37 : மூ.அரவிந்தராஜ், 80, படவேட்டம்மன் கோயில் தெரு, சிறுனைபெருகல், காஞ்சிபுரம்.

## முசரவாக்கம் ஊராட்சி

### அரசுப்பண்ணை கிளை

**அமைப்பாளர் :** உ.தட்சிணாமூர்த்தி, 172, வண்ணார் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) செ.மணி, 172, வண்ணார் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம். (2) ம.ராமு, 124, நடுத்தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம். (3) செ.ஆகாஷ், 1, கொட்டா புளித்தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

### யாதவர் குடியிருப்பு கிளை

**அமைப்பாளர் :** ஆ.தர்மன், 258, கிழக்குத் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) பா.பிரகாஷ், 270, கிழக்குத் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம். (2) உ.பிரபாகரன், 248, கிழக்குத் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம். (3) ரா.இரஞ்சித்குமார், 14, பிராமணர் வீதி, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

### முசரவாக்கம் கிளை

**அமைப்பாளர் :** பா.கோகுல்நாத், 9, பிராமணர் வீதி, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) வீ.கிஷோர், 50, பிராமணர் வீதி, முசரவாக்கம், காஞ்சிபுரம். (2) இர.தங்கராஜ், 186, தோட்டக் காரத் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம். (3) தி.ரோஹித், 59, பிராமணர் வீதி, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

### கொதுகை ஏரி கிளை

**அமைப்பாளர் :** வெ.லட்சுமிபதி, 540, கொதுகைஏரி, முசர வாக்கம், காஞ்சிபுரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ப.ஜனார்த்தனன், கொதுகைஏரி, முசரவாக்கம், காஞ்சிபுரம். (2) பு.சத்தியமூர்த்தி, கொதுகைஏரி, முசரவாக்கம், காஞ்சிபுரம். (3) தே.லட்சுமணன், 221, மந்தைவெளித் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

### சத்யா நகர் கிளை

**அமைப்பாளர் :** த.தாமரைச்செல்வன், தோட்டக்காரன் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) த.தாமோதரன், பட்டறைத் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம். (2) சே.பாண்டியன், பட்டறைத் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம். (3) ஆ.தினேஷ், பட்டறைத் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

### முசரவாக்கம் குடியிருப்பு கிளை

**அமைப்பாளர் :** மு.இளையராஜா. 200, பெருமாள் கோயில் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ப.தனுஷ், 173, பெருமாள் கோயில் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம். (2) ர.அவினாஷ், 201, பெருமாள் கோயில் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம். (3) ப.வெற்றிச்செல்வன், 109, கோட்ரஸ் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

### சடையவிநாயகபுரம் கிளை

**அமைப்பாளர் :** ஐ.ஸ்ரீதர், 468/2, சடையவிநாயகபுரம், முசரவாக்கம், காஞ்சிபுரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) மு.குமரேசன், 441, சடைய விநாயகபுரம், முசரவாக்கம், காஞ்சிபுரம். (2) ர.பார்த்திபன், 449, சடையவிநாயகபுரம், முசரவாக்கம், காஞ்சிபுரம். (3) ஏ.மணிகண்டன், 448, சடையவிநாயகபுரம், முசரவாக்கம், காஞ்சிபுரம்.

### பாக அமைப்பாளர்கள்

பாகம் – 10 : அ.இளையராஜா, 200, பெருமாள் கோயில் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

பாகம் – 11 : சா.மாலிக் பாஷா, 398, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

பாகம் – 12 : பா.கோகுல்நாத், 9, பிராமணர் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

பாகம் – 13 : அ.அன்பழகன், 300, கிழக்குத் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

பாகம் – 14 : உ.தட்சிணாமூர்த்தி, 172, வண்ணார் தெரு, முசரவாக்கம், காஞ்சிபுரம்.

## பெரும்பாக்கம் ஊராட்சி

### ஆதிதிராவிடர் குடியிருப்பு கிளை

**அமைப்பாளர் :** அ.விவேகானந்தன், 67/74, பஜனை கோயில் தெரு, பெரும்பாக்கம், முத்துவேடு, காஞ்சிபுரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1)ம.விக்னேஷ், 5, பிரதான சாலை, பெரும்பாக்கம், முத்துவேடு, காஞ்சிபுரம். (2) ர.சுபாஷ், 75, மாரியம்மன் கோயில் தெரு, பெரும்பாக்கம், முத்துவேடு, காஞ்சிபுரம். (3) ர.ஜெயகாந்தன், 35, பிரதான சாலை, பெரும்பாக்கம், முத்துவேடு, காஞ்சிபுரம்.

### பெரும்பாக்கம் கிளை

**அமைப்பாளர் :** ம.பிரவீன்குமார், 4, பெரும்பாக்கம், முத்துவேடு, காஞ்சிபுரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) சீ.நேதாஜி, 172, பிரதான சாலை, பெரும்பாக்கம், காஞ்சிபுரம். (2) சே.மணிபாரதி, 172, பிரதான சாலை, பெரும்பாக்கம், காஞ்சிபுரம். (3) வெ.அஜித்குமார், 4, பிரதான சாலை, பெரும்பாக்கம், காஞ்சிபுரம்.

### யாதவ கிளை :

**அமைப்பாளர் :** மா.பாபு, 7/38, பஜனை கோயில் தெரு, பெரும்பாக்கம், முத்துவேடு, காஞ்சிபுரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1)ஆ.சூரியா, 4, பெரும்பாக்கம் தெரு, முத்துவேடு, காஞ்சிபுரம். (2) ப.கீர்த்திவாசன், ஆற்றங்கரை ஓர தெரு, பெரும்பாக்கம், முத்துவேடு, காஞ்சிபுரம். (3) கி.ஜானகிராமன், 4, பெரும்பாக்கம் தெரு, முத்துவேடு, காஞ்சிபுரம்.

### பாக அமைப்பாளர்

பாகம் – 15 : உ.சதீஷ்குமார், 165, எலந்தோப்பு தெரு, பிரதான சாலை, பெரும்பாக்கம், காஞ்சிபுரம்.

## கிளார் ஊராட்சி

### கிளார் குடியிருப்பு கிளை

**அமைப்பாளர் :** ர.சாருகேஷ், 8, பஜனை கோயில் தெரு, கிளார், காஞ்சிபுரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) சொ.வாஞ்சிநாதன், 11, பஜனை கோயில் தெரு, கிளார், காஞ்சிபுரம். (2) ஜெ.தினேஷ், 258, தாமல் சாலை, கிளார், காஞ்சிபுரம். (3) அ.ஆதித்யா, 190, பஜனை கோயில் தெரு, கிளார், காஞ்சிபுரம்.

### கிளார் மேட்டுத்தெரு கிளை

**அமைப்பாளர் :** ப.விக்னேஷவரன், 299, மேட்டுத்தெரு, கிளார், தாமல், காஞ்சிபுரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) வி.தமிழ்ச்செல்வன், 82, மேட்டுத்தெரு, கிளார், தாமல், காஞ்சிபுரம். (2) மு.அன்பழகன், 79, மேட்டுத்தெரு, கிளார், தாமல், காஞ்சிபுரம்.

### கிளார் கிளை

**அமைப்பாளர் :** சு.சஞ்சய், பஜனை கோயில் தெரு, கிளார், காஞ்சிபுரம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ஏ.சுதாகர், 25, பஜனை கோயில் தெரு, கிளார், காஞ்சிபுரம். (2) கு.செல்வராஜ், பஜனை கோயில் தெரு, கிளார், காஞ்சிபுரம். (3) அ.தென்னரசு, பஜனை கோயில் தெரு, கிளார், காஞ்சிபுரம்.

### பாக அமைப்பாளர்கள்

பாகம் – 8 : ரா.கணேஷ்குமார், 56/1, பள்ளத்தெரு, கிளார், காஞ்சிபுரம்.

பாகம் – 9 : ஸ்ரீ.ஆகாஷ், 209/1, பஜனை கோயில் தெரு, கிளார், காஞ்சிபுரம்.

அன்பகம்
சென்னை – 18
நாள் : 06–09–2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி

8

## சைதாப்பேட்டையில் ரூ. 29 கோடி செலவில் நவீன மருத்துவமனை:

# ‘இந்தியாவின் மருத்துவத் தலைநகரம் தமிழ்நாடு’ என்று பெருமையுடன் சொல்வோம்!

## புதிய மருத்துவமனையைத் திறந்து வைத்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

***சென்னை,செப்.9-***

***சென்னை, சைதாப்பேட்டையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், நவீன மருத்துவ வசதிகளுடன் ரூ.28.75 கோடி செலவில், 6 தளங்களுடன் புதிதாக கட்டப்பட்டுள்ள மருத்துவ மனையை துணைமுதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து சிறப்புரை யாற்றினார்.***

***அப்போது அவர், ``தமிழ்நாட்டை, குறிப்பாக சென்னை மாநகரத்தை இந்தியா வின் `மெடிக்கல் கேப்பிட்டல் (மருத்துவத் தலைநகரம்)’ என்று சொல்லும் அளவு, திராவிட மாடல் அரசின் சாதனைகள் பெருமைப்பட வைத்திருக்கின்றன” என்று அவர் குறிப்பிட்டார்.***

***துணைமுதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:***

*நம் திராவிட மாடல் அரசின் சார்பாக, சுமார் 29 கோடி ரூபாய் மதிப்பீட்டில், சைதாப்பேட்டையில் கட்டப்பட்டுள்ள, நவீன அரசு மருத்துவமனையை, உங்களின் முன்னிலையில், திறந்து வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றேன். இந்த வாய்ப்பை அளித்த மாண்பு மிகு அமைச்சர் அண்ணன் மா. சுப்பிரமணியன் அவர்களுக்கு மீண்டும் எனது பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

**120 படுக்கைகள்**

*120 படுக்கைகள் கொண்ட இந்த மருத்துவமனை இன்று முதல் சைதாப்பேட்டை மக்களுக்கு மட்டுமின்றி, இந்த சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள, அத்தனை பொது மக்களுக்கும், மிகவும் பயன்படுகின்ற வகையில் அமைந்துள்ளது. `கல்வியும் சுகாதாரமும்தான், நம் திராவிட மாடல் அரசின் இரு கண்கள்’ என்று நம் மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். அந்த அளவுக்கு கல்விக்கும், மருத்துவத்திற்கும் மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கின்ற அரசாக திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது.*

*முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சிக்காலத்தில் சுகாதாரத்துறையில், தமிழ்நாடு அடைந்த வளர்ச்சி, உயரம் ஏராளம், ஏராளம், கணக்கில் அடங்காதது. போலியோ ஒலிப்பில் தொடங்கி, வருமுன் காப்போம் திட்டம் வரைக்கும் எண்ணற்ற திட்டங்களை நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் செயல்படுத்திக் காட்டினார். அந்த திட்டங்கள்தான் நம் தமிழ்நாட்டை, குறிப்பாக சென்னை மாநகரத்தை இந்தியாவின் `மெடிக்கல் கேப்பிட்டல் (மருத்துவத் தலைநகரம்)’ என்று சொல்கிற அளவிற்கு, நம் தமிழ்நாட்டைப் பெருமைப்பட வைத்திருக்கிறது.*

**240 கோடி ரூபாய்**

*முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் வழியில் நம் முதலமைச்சர் அவர்களும் மருத்துவத்துறைக்கு இன்றைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். சில திட்டங்களை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். 240 கோடி ரூபாய் மதிப்பீட்டில், கிண்டியில் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை பத்து மாதங்களில் கட்டி முடிக்கப்பட்டு, முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்டு, இன்றைக்கு ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பயன்பெற்று வருகிறார்கள்.*



*அதுமட்டுமல்ல, மருத்துவ சேவைகள் என்பது அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று சேர வேண்டும் என்று 608 அர்பன் கேர் வெல்னஸ் சென்டர்களையும் (நகர்ப்புற நல்வாழ்வு மையங்கள்) நம் முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.*

**சேவைகள் வீடு தேடி**

*மக்களுக்கு மருத்துவ சேவைகள் வீடு தேடி செல்ல வேண்டும் என்று, நம் முதலமைச்சர் அவர்கள் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தை, கொரோனா காலத்தில் திறந்து வைத்தார்கள். நம் அரசு மருத்துவத் துறையில் எடுக்கின்ற பல்வேறு முயற்சிகளுக்கு பல்வேறு திசைகளில் இருந்து விருதுகளும், பாராட்டுகளும், அங்கீகாரங்களும் தொடர்ச்சியாக கிடைத்து வருகின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தை, சிறப்பாக செயல்படுத்தியதற்காக, ஐ.நா. சபையின், `டாஸ்க் போர்ஸ் விருது’, இன்றைக்கு தமிழ்நாடு அரசு பெற்றிருக்கிறது. அதற்காக, அந்தத் துறைக்கு நமது பாராட்டுகள் வாழ்த்துகள்.*

*சுகாதாரத் துறையிலும் தமிழ்நாடு இன்றைக்கு இந்தியாவுக்கே வழிகாட்டிக் கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையல்ல. உடல் உறுப்பு தானத்தில் சிறப்பாகச் செயல்பட்டதற்காக இந்தியாவிலேயே சிறந்த மாநிலத்திற்கான, தேசிய விருதும் சமீபத்தில், நம் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல், ‘இன்னுயிர் காப்போம், நம்மை காக்கும் 48’ எனும் மகத்தான திட்டத்தில், சாலை விபத்தில் சிக்கிய, நான்கு லட்சத்திற்கும் அதிகமான பொது மக்களின் உயிரை, நம் முதலமைச்சர் அவர்களும், நமது அரசும் காப்பாற்றி இருக்கிறது.*

**2 லட்சத்து 60 ஆயிரம் மக்கள்**

*தமிழ்நாட்டு மக்களின் நலனைப் பாதுகாக்கின்ற வகையில், ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ என்ற திட்டத்தை, நம் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். இந்தத் திட்டத்தின் கீழ் 1,250 முகாம்கள் நடத்தப்பட்டு இருக்கின்றன. முதற்கட்டமாக நடத்தப்பட்ட 185 முகாம்களில், 2 லட்சத்து 60 ஆயிரம் மக்கள் பயன்பெற்று இருக்கிறார்கள்.*

*முந்தைய ஆட்சியர்களால் கைவிடப்பட்ட ‘நலம் காப்போம்’ திட்டத்தை, மீண்டும் நமது அரசு செயல்படுத்தியது. கடந்த ஆண்டு மட்டும் இந்த முகாம்களில் கிட்டத்தட்ட 12 லட்சம் பேர் பயன்பெற்று இருக்கிறார்கள் என்றால், அது இந்தத் துறையின் சாதனை. ஆகவே மருத்துவத் துறையில் இன்றைக்கு மட்டுமல்ல, என்றைக்கும் தமிழ்நாடுதான் நம்பர் 1 என்பதை நிரூபிக்கின்ற வகையில், நமது அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நமது திராவிட மாடல் அரசு அமைந்தது முதல் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கக் கூடிய, அண்ணன் மா.சுப்பிரமணியன் அவர்கள் உட்பட, மருத்துவம் மற்றும் சுகாதாரத்துறை அதிகாரிகள் அனைவருக்கும், எனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

**மக்கள் கடும் எதிர்ப்பு**

*இது அரசு நிகழ்ச்சி எனவே அதிகமாக அரசியல் பேச விரும்பவில்லை. அண்ணன் மா.சுப்பிரமணியன் அவர்கள் பேசும்பொழுது, எதிர்க்கட்சித் தலைவரின் குற்றச்சாட்டுகளுக்கு எல்லாம், தெளிவாக பதில் கூறினார். எதிர்க்கட்சித் தலைவரின் சுற்றுப் பயணத்தில், பத்து நாட்களுக்கு முன்பு என்ன நடந்தது என்பதை, நீங்களே பார்த்து இருப்பீர்கள். வாகனத்தில் நின்றவாறு, அவர் நின்று பேசிக் கொண்டிருக்கும் பொழுது, அங்கு வந்த ஆம்புலன்ஸ் வண்டியை, நுழையவிடாமல், அதற்கு என்னவெல்லாம் தடங்கல்கள் செய்ய முடியுமோ, அதைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தார். அதற்கு பொதுமக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.*

*எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வது, நீங்கள் இன்றைக்கு ஆம்புலன்ஸ் வண்டிகளை எல்லாம் நிறுத்த முயற்சி செய்து கொண்டுள்ளீர்கள். ஆனால், உங்களுக்கு ஒன்று புரியவில்லை. உங்களின் கட்சியே விரைவில் ஆம்புலன்ஸ் வண்டியில் செல்லக்கூடிய நிலைமையை, தமிழ்நாட்டு மக்கள் ஏற்படுத்துவார்கள். விரைவில் ஐ.சி.யூ.வில்தான் உங்களின் இயக்கம் அனுமதிக்கப்படும். உங்களையும் காப்பாற்றுகின்ற பொறுப்பை, நம் முதலமைச்சர் அவர்கள் செய்வார் என்பதையும் இங்கே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.*

*இந்த மருத்துவமனையில் பணியாற்ற உள்ள மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பணியாளர்கள் அத்தனை பேருக்கும் எனது நன்றிகளையும், பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டு, இந்த மருத்துவமனையைப் பயன்படுத்தி, நோயற்ற வாழ்வை அமைத்துக் கொள்ளுமாறு உங்களிடம் கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்பை அளித்த அண்ணன் மா.சுப்பிரமணியன் அவர்களுக்கும், துறை அதிகாரிகள் அத்தனை பேருக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.*

*இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.*

**பங்கேற்றவர்கள்**

*இதில் அமைச்சர்கள் கே.என்.நேரு, மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அரவிந்த் ரமேஷ், காரப்பாக்கம் கணபதி, பிரபாகர் ராஜா, சென்னை மாநகராட்சி துணை மேயர் மகேஷ்குமார், துறையின் அரசு செயலாளர் செந்தில்குமார் ஐ.ஏ.எஸ்., தேசிய நலவாழ்வு குழுமத்தின் உறுப்பினர் மருத்துவர் அருண் தம்புராஜ் ஐ.ஏ.எஸ்., சென்னை மாநகராட்சியின் மண்டல குழுத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜன், நொலம்பூர் ராஜா, மருத்துவ மற்றும் ஊரக நலப் பணிகளின் இயக்குநர் மருத்துவர் சித்ரா, சங்கர் கணேஷ், செஞ்சி சிவா மற்றும் அரசு அதிகாரிகள், அலுவலர்கள், டாக்டர்கள், செவிலியர்கள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.*



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.9.2025) சென்னை சைதாப்பேட்டையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 28.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சைதாப்பேட்டை அரசு மருத்துவமனை கட்டடத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, எஸ்.அரவிந்த் ரமேஷ், க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகரராஜா, துணை மேயர் மு.மகேஷ் குமார், மண்டல குழுத் தலைவர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, ஆர்.துரைராஜ், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வுக் குழும இயக்குநர் அருண் தம்புராஜ், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் மரு.வி.வினித், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் மரு.சித்ரா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.